JETIR.ORG ISSN: 2349-5162 | ESTD Year : 2014 | Monthly Issue
JOURNAL OF EMERGING TECHNOLOGIES AND INNOVATIVE RESEARCH (JETIR)
An International Scholarly Open Access, Peer-reviewed, Refereed Journal

# டாக் டர். மு.வ.வின் வாழ்வில் தமிழர் பண்பாட்டு நெறிகள்

## Tamil Cultural Values in the Life of Dr. Mu. Va

**முனைவர் . ஆர் .ஜெயராஜ்,** M.A., M.Phl., P.hD.,

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,

இ.ஜி.எஸ் பிள்ளை கலை மற்றும் அறிவியல் கல்லூரி,

நாகப்பட்டினம்.

## ஆய்வுச் சுருக்கம்:

**“டாக்டர். மு.வ.வின் வாழ்வில் தமிழர் பண்பாட்டு நெறிகள்”** என்னும் இவ்வாய்வு, தமிழறிஞரும் படைப்பாளருமான டாக்டர் மு. வரதராசனாரின் வாழ்விலும் படைப்புகளிலும் வெளிப்படும் தமிழர் பண்பாட்டு நெறிகளை ஆராய்கிறது. இலக்கியம் என்பது மக்களின் வாழ்வியல் முறைகளையும், பண்பாட்டு விழுமியங்களையும் பிரதிபலிப்பதோடு, அவற்றைச் சமூகத்திற்கு எடுத்துரைக்கும் கருவியாகவும் விளங்குகிறது. இந்நிலையில், டாக்டர் மு.வ. அவர்களின் வாழ்க்கை முறையும் இலக்கியப் படைப்புகளும் தமிழர் பண்பாட்டு மரபுகளோடு கொண்டுள்ள தொடர்பு இவ்வாய்வில் முதன்மைப் படுத்தப்படுகிறது. மு.வ. அவர்களின் **குடும்பப் பண்பாடு, பெரியோரை மதித்தல், கல்வியறிவு, பன்மொழிப் புலமை, எளிய வாழ்க்கை முறை, சமூக அக்கறை** ஆகியவை தமிழர் பண்பாட்டு நெறிகளின் அடிப்படையில் ஆராயப்படுகின்றன. குறிப்பாக, அவரது படைப்புகளில் காணப்படும் அன்பு, அறம், குடும்பநெறி, சமூகப் பொறுப்பு, எளிமை, பண்பாட்டுப் பாதுகாப்பு போன்ற கருத்துகள் ஆராயப்படுகின்றன. அவரது **“மண்குடிசை”** உள்ளிட்ட படைப்புகள் வழியாக ஆடம்பரத்தைத் தவிர்த்து எளிமையான வாழ்வை மேற்கொள்ளுதல், சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளைக் கருத்தில் கொள்ளுதல் போன்ற வாழ்வியல் விழுமியங்கள் வெளிப்படுத்தப் படுகின்றன.

மேலும், டாக்டர் மு.வ. அவர்களின் சமூக நோக்கு, தமிழர் பண்பாடு மற்றும் கலாச்சாரத்தைப் பாதுகாக்கும் படைப்பாக்கம், அறிஞர்கள் மற்றும் நாட்டுத் தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் பதிவு செய்தமை ஆகியனவும் இவ்வாய்வில் எடுத்துரைக்கப் படுகின்றன. இதன் வழியாக, மு.வ. அவர்களின் வாழ்க்கையும் படைப்புகளும் தமிழர் பண்பாட்டு நெறிகளைப் பேணுவதற்கும் அடுத்த தலைமுறையினரிடம் அவற்றை எடுத்துச் செல்வதற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளன என்பது இவ்வாய்வில் நிறுவப்படுகிறது.

**Abstract:**

The study titled "Tamil Cultural Values in the Life of Dr. Mu. Va." examines the Tamil cultural values expressed in the life and literary works of Dr. Mu. Varadarasanar, a Tamil scholar and creative writer. Literature not only reflects the ways of life and cultural values of people but also serves as a means of conveying them to society. In this context, the relationship between the life style and literary works of Dr. Mu. Va. and the cultural traditions of the Tamil people is given primary importance in this study.

Dr. Mu. Va.'s family values, respect for elders, education, multilingual scholarship, simple way of life, and social concern are examined on the basis of Tamil cultural values. In particular, the concepts of love, virtue, family ethics, social responsibility, simplicity, and cultural preservation found in his literary works are examined. Through his works, including "Maṇkuṭisai," life values such as avoiding extravagance and leading a simple life, as well as being conscious of the inequalities prevailing in society, are brought to light.

Furthermore, Dr. Mu. Va.'s social perspective, his creative works aimed at preserving Tamil culture and traditions, and his documentation of the lives of scholars and national leaders are also discussed in this study. Through this, the study establishes that the life and literary works of Dr. Mu. Va. have made a significant contribution to preserving Tamil cultural values and transmitting them to the next generation.

## முன்னுரை:

இலக்கியம் மக்கள் வாழ்க்கைக்கு வழி காட்டுவதாகும். மக்கள் வாழ்க்கை நாட்டின் பண்பாட்டுப் பழக்கவழக்கங்களின் அடிப்படையில் எழுதப்படுவதே இலக்கியமாகும். அனைவராலும் டாக்டர்.மு.வ. என்று அழைக்கப்படும் டாக்டர் மு.வரதராசனார் பண்டைய தமிழகத்தில் வாழ்ந்த தமிழர்களின் பண்பாட்டுப் பழக்கவழக்கங்களில் தான் வாழ்ந்ததோடு அவற்றை உலக மக்கள் அனைவருக்கும் தன் படைப்பின் மூலம் தந்து இன்று தமிழர்களின் நெஞ்சில் வாழும் டாக்டர். மு.வ. வாக நீங்க இடம் பெற்றவர்.

இவருடைய படைப்புகள் பெரும்பாலும் சமுதாய சிந்தனை மிக்கனவாகவும், தமிழ்ப் பண்பாட்டைக் கட்டிக்காப்பனவாகவும், காலத்தால் அழியாத கருத்துச் செறிவுள்ள தத்துவங்களாகவும் விளங்குகின்றன. இவர் தன் உழைப்பால் உயர்ந்த எழுத்தாளர்; பன்மொழி பயின்ற இலக்கியச் செல்வர். மு.வ.

## பெற்றோர்களின் பண்பாடு:

இவரது பெற்றோர் டாக்டர். மு.வ.வின் பாட்டனார் பெயராகிய வரதராசன் எனும் பெயரைச் சூட்டி மகிழ்ந்தனர். எனினும் குடும்பப் பெரியவரின் பெயரை எப்படி வாய்விட்டு அழைப்பது என்னும் கூச்சத்தால் "திருவேங்கடம்" என்னும் செல்லப் பெயரால் அழைத்து மகிழ்ந்தனர். வயதில் பெரியோரின் பெயரை வாய் திறந்து நேரடியாக கூறுவது தமிழர் பண்பாடு அன்று என்பதை டாக்டர். மு.வ.வின் பெற்றோரே நமக்கு உணர்த்துகின்றார்கள். "தாயைப் போல பிள்ளை நூலைப் போலச் சேலை" என்னும் பழமொழிக்கேற்ப டாக்டர் மு.வ.வும் தமிழர் பண்பாட்டு நெறியோடு வாழ்ந்தவர்.

**"நவில்தொறும் நூல் நயம் போலும் பயில்தொறும்**

**பண்புடையாளர் தொடர்பு" - (குறள்.783)** என்ற வள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப கல்வியைக் கற்று பட்டங்கள் பல பெற்று பண்பும் பயனும் துய்த்து உலக மக்களுக்குப் பயன்படும் கருத்துக்களைப் பரப்பி வந்தார். தெய்வப்புலவர் திருவள்ளுவர் இயற்றிய குறள் வழி வாழ்ந்து, வாழ்வியல் பண்பாட்டு இலக்கியங்கள் பல இயற்றித் தந்துள்ளார்.

## பன்மொழிப்புலவர்:

பிறப்பாலும், இனத்தாலும், பேசும் மொழியாலும், கற்ற கல்வியாலும் பிறர்க்கு உற்றுழி உதவும் பணியாலும் தூய தமிழராகவே வாழ்ந்தார். தம் தாய்மொழியை அன்றி ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி ஆகிய பல மொழிகளைக் கற்றுப் பன்மொழிப் புலவராக விளங்கினார்.

## பண்பாடு காக்கும் படைப்புகள்:

டாக்டர் மு.வ. அவர்கள் பல சமுதாய நாவல்களை எழுதி மக்களிடையே சீர்குலைந்து கிடக்கும் தமிழ்ப்பண்பாட்டை நிலை நிறுத்தியுள்ளார். சமுதாயத்தை திருத்தும் நோக்கத்தோடு தொடர்ந்து பல நாவல்களை எழுதினார். அவரது நாவல்கள் நாட்டில் நடமாடத் தொடங்கியது முதல் நாட்டில் பல நன்மைகள் ஏற்பட்டன.

**“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**

**பண்பும் பயனும் அது”** – **(குறள்.45)**

என்ற அடிப்படையில் டாக்டர். மு.வ. அவர்கள் எழுதிய **‘கயமை’** என்னும் நாவலில் அன்பு இருந்தால் அனைத்து நன்மைகளையும் பெறலாம் என்னும் பேருண்மையை உயிரோட்டமாக வைத்து அந்தநாவலைப் படைத்துள்ளார். **“வாழ்க்கை மிகப்பெரிய கலை அதில் தேர்தல் கடமையுடன் வாழக் தெரிந்தவர்களாக விளங்குவதாலே சமுதாயத்திற்கு நலம் செய்யத்தக்க நல்லதொன்று; எப்படி எனின் நம்மைப் பார்த்து பிறர் கற்க்குமாறு நாம் ஒரு நூலாக பயன்படுவோம்” (இரா. தண்டபாயுதம். பக்.6-7)** என்று எழுதி அதன்படி வாழ்ந்து காட்டிய வாழ்கைக் கலைஞர். **“டாக்டர். மு.வ.வின் கருத்துகள் வரலாற்றிலிருந்தும் நாட்டுக்கதை களிலிருந்தும், புராணக் கதைகளிலிருந்தும் அமைந்தவையாக அவரைச் கருத முடியாது. அவருடைய கருப்பொருள்கள் அன்றாட வாழ்க்கையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவை ஆகும்.” (ந.விபிதா. மு.வ.வின் மண் குடிசை ஓர் ஆய்வு. பக்.8)**

## சமுதாய நோக்கு:

டாக்டர். மு.வ. அவர்கள் சமுதாயத்தில் நடைபெறும் பிரச்சனைகளையும், பண்பாட்டுச் சீரழிவையும் மையமாகக் கொண்டு நாவல்கள் படைப்பதில் வல்லவராவார்.

டாக்டர். மு.வ.வின் நாவலையும், தமிழ்மக்களின் பண்பாட்டையும் தனித்தனியாகப் பிரித்துப் பார்க்கவே முடியாது. இவருடைய நாவல்கள் யாவும் தமிழ் மக்களின் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் பிரதிபலிக்கும் கண்ணாடிகளாக உள்ளன.

## எளிய வாழ்வு:

ஒரு மனிதன் எளிய வாழ்வு வாழ வேண்டும் என்றால் ஏக்கத்தை உண்டாக்கி கொண்டு மனத்தைத் எடுக்காமல் இருக்க வேண்டும். ஏனென்றால் தேவைகளைக் குறைத்துக் கொண்டு எளிய வாழ்க்கை வாழ்வது என்றைக்கும் நல்லது எனத் தன்னுடைய வாழ்வின் மூலம் பிறர்க்கு வலியுறுத்தி வாழ்ந்து காட்டியவர்.

**“உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை**

**அற்றே தவத்திற்கு குரு” (குறள்.261)**

என்னும் வள்ளுவனின் கூற்றுப்படி கவலை இல்லாத, அமைதியான தவ வாழ்க்கையை வாழ்ந்தவர். மண்குடிசை என்னும் நாவலில், **“நம்மைச் சுற்றிலும் ஏழைகள் உணவுக்கும் உடைக்கும் வழி இல்லாமல் வாடும்போது நாம் ஆடம்பரத்தை நாடுவது பாவம்” (மு.வ.மண்குடிசை – பக்.62.)** என்று காந்தியின் கொள்கையை இந்தநாவலில் சுட்டிக் காட்டியுள்ளார்.

எளிய வாழ்க்கை யார் மனதுக்கு இன்பம் தரும்; அது மருந்து உட்கொள்வது போன்றது; மருந்து உட்கொண்டால்தான் நோய் தீரும்; ஆகவே எளிய வாழ்வை உணர்ந்தவர்களுக்குத்தான் எளிய வாழ்வு இன்பத்தைத் தரும். ஆசைகள் இருந்தால் மனம் கெட்டு வாழ்வே சுமையாகி விடும். டாக்டர்.மு.வ. பழமைக்கும் புதுமைக்கும் பாலமாகத் திகழ்ந்தார். பழந்தமிழ் இலக்கியங்களைப் போற்றுவதிலும், தொன்று தொட்டு வரும் தமிழ்ப்பண்பாட்டு நெறிகளைக் காப்பாற்றுவதிலும் அவர் தலைசிறந்து நின்றார். அதே சமயத்தில் தன் பழக்க வழக்கங்களைச் சீர்திருத்திக் கொள்ள வேண்டும் என்பனவற்றிலும் அவர் முன்னோடியாக விளங்கினார்.

## பிற அறிஞர்களின் வாழ்க்கை வரலாறு:

அறிஞர்கள், நாட்டுக்குழைத்த தலைவர்கள் ஆகியோரைப் பற்றி எண்ணுதலையும் அவர்கள் தமிழ் பண்பாடு, நாகரிகம், கலாச்சாரம், பழக்கவழக்கங்கள் போன்றவற்றை காத்து அவர்கள் சமுதாயத்திற்கு ஆற்றிய தொண்டினை எண்ணிப்பார்த்து அவர்களின் வழியை மக்கள் பின்பற்ற வேண்டும் என்று டாக்டர் மு.வ. அவர்கள் பல அறிஞர்கள் தேசத் தலைவர்களது வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ளார். அவை பின்வருமாறு.

**1. காந்தியடிகள்**

**2. கவிஞர் ரவீந்திரநாத் தாகூர்**

**3. அறிஞர் பெர்னாட்ஷா**

**4. திரு.வி.க.**

## முடிவுரை:

தமிழ் இலக்கியத்துறையில் தன்னிகரற்ற தலையாயப் பணியாற்றியதால் டாக்டர் மு.வ. அவர்களை இந்திய பேரரசும், தமிழக அரசும் பாராட்டி பரிசு பல தங்கு பெருமைப்படுத்தியது. ஓயாது உழைத்து உலக பேரறிஞர்களில் ஒருவராகப் போற்றப்பட்டு உலக நாடுகளை எல்லாம் சுற்றிப் பார்த்த முதல் தமிழ்பேராசிரியரும் டாக்டர்.மு.வ. அவர்களே ஆவார். டாக்டர் மு.வ. அவர்கள் வாழ்ந்ததே இலக்கியப்பணியாற்றுவதற்கே என்பதனை நாம் அவரது படைப்புகளைக் கொண்டே அறியலாம். மு.வ. அவர்கள் பொழுது போக்கிற்காகவும், வருமானத்திற்காகவும் தன்னுடைய படைப்புகளை உருவாக்கவில்லை.

சீரிய செய்தியையும், சிறந்த கருத்தையும் உரிய உண்மையையும், உணர்த்தும் தமிழ்ப் பண்பாட்டினை சமுதாயத்திற்கு அளிக்க வேண்டும் என்ற நோக்கோடு உருவாக்கப்பட்டதை நம்மால் அறிய முடிகிறது. இக்கட்டுரையின் வழி **டாக்டர் மு.வ.** அவர்கள் தன்னுடைய வாழ்விலும், படைப்பிலும் தமிழர் பண்பாட்டைக் காத்து தன்னையும், பிறரையும் தமிழ்ப்பண்பாட்டின் வழி நெறிப்படுத்தியவர். இவரது வாழ்க்கை வரலாறும் படைப்புகளும் தலை சிறந்த தமிழரது பண்பாட்டுக் களஞ்சியமாகத் திகழ்கிறது.

தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை ஆகவே தமிழ் தொண்டர் பன்மொழிச் செல்வர் டாக்டர். மு.வரதராசன் நம்மிடையே நந்தா விளக்காக என்றும் வாழ்கின்ற தமிழறிஞர் என்பதில் ஐயமில்லை.

## துணை நூற்பட்டியல்:


1. தண்டாயுதம். இரா. – நாவல் வளம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை – 5, 1977
2. புலியூர் கேசிகன் – திருக்குறள் (பரிமேலழகர் உரை), பூம்புகார் பதிப்பகம், பிரகாசம் சாலை (பிராட்வே), சென்னை – 600 108, 2007
3. வரதராசன். மு – மண்குடிசை, பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை – 600 108, 2007 மறுபதிப்பு.